விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் இருந்த இடமோ 340. அப்படி பல இடங்களில் இருந்ததாகச் சொல்ல முடியாது. குறிப்பிட்ட சில இடங்களில் தான் அந்த நிலை இருந்தது. ஆகவே அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து சரிப்படுத்தவேண்டுமென்பதற்காக கல்விக் குழு ஆராய்ந்து பார்த்து தக்க முடிவு எடுத்தால், அடுத்த ஆண்டிலே அதை சீர்திருத்தலாம் என்று கருதி இருக்கிறேன்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் திருச்சியிலே ஒரு கல்லூரியில் 9 ஆயிரம் பேர்களிடமிருந்து அப்ளிகேஷன் வந்தது என்று சொன்னார்கள். ஒரு அப்ளிகேஷனுக்கு 4 ரூபாய் என்று கல்லூரிகளிலே வாங்குகிறார்கள். கல்லூரிகளிலே சேர்ந்த வர்கள் போக மீதி உள்ளவர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ? திருச்சியிலே எந்தெந்த இடத்தில் புதிய வகுப்புகள் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு கணக்கைத் தான் சொன்னேன். இந்த ஆண்டு கணக்கு இன்னும் வரவில்லை. இந்த ஆண்டு இன்னும் அதிகமாக இருக்கலாமே தவிர, குறைவாக இருப்பதற்கு இடம் இல்லை. விண்ணப்பத்தாள்கள் கொடுப்பதற்கு பணம் வசூலிக்கிறார் கள். அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 8 அணா தான் வசூலிக்கப்படுகிறது. இடம் கிடைத்த பிறகு செலுத்தப்படவேண்டிய கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிறது. சில இடங் களிலே 4 ரூபாய், 5 ரூபாய், 6 ரூபாய் என்று பலவிதமாக வசூலிக்கிறார் கள். அவைகளை யெல்லாம் ஒருமுகப்படுத்தவேண்டுமென்று கல்லூரி முதல் வர்களுக்கு தெரிவித்திருக்கிறோம். பல்கலைக் கழகத்திடமும் இதை ஒரு முகப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கிருந்து தகவல் வந்தவுடன் அரசாங்கம் முடிவு செய்யும். திருச்சியைப் பொறுத்தவரை பெரியார் கல்லூரியில், பிஷப் கல்லூரியில், நேஷனல் கல்லூரியில் ஆகியவற்றில் இட வசதிகள் செய்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் பல்கலைக் கழகத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் முடிவு தெரியவில்லை.

ஆலைகளில் நிர்வாகக் குழு

* 323 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு பஞ்சாலைகளிலும், சர்க்கரை ஆலைகளிலும், எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை புதிய நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்படுகின்றனர் ?

(இ) இனிமேல் புதிதாக நியமிக்கும் நிர்வாகஸ்தர்கள் எந்த அடிப் படையில் நியமிக்கப்படுவர் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) முதல் தடவையாக சர்க்கரை/நூல்நூற்பு ஆலைகளில் பதிவாளர்களால் நியமிக்கப் படும் நிர்வாகக் குழு மூன்று ஆண்டுகளுக்கு செயல்படும். மேற்படி இலாகா அதிகாரி தொடர்ந்து நிர்ணயிக்கும் கால அளவுக்கு நிர்வாகக் குழு கடன் வாங்கிய மூலதனம் முழுவதும் திருப்பிக் கொடுக்கும் வரை செயல்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எல்லாத் தொழிற்சாலைகளிலும் ஒரே நேரத்தில் நியமனம் செய்யப்படுகிறதா ? அல்லது வெவ்வேறு காலத்திலே நியமனம் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூற்பு ஆலைகளைப் பொறுத்த வரையில் ஒரே காலத்தில்தான் 10 நூற்பு ஆலைகளில் நியமனம் செய்யப் பட்டிருக்கின்றன. சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை தனித்தனியாக நியமனம் செய்யப்படுகின்றன.

1967 ஜூலை 14]

திரு என். எஸ். வி. சித்தன் : கூட்டுறவு தொழிற்சாலையின் நிர்வாகக் குழுவின் தலைவர்கள் (Chairman, Board of Directors) பெரும்பாலும் உத்தியோகப் பற்றற்றவர்களாக இருக்கவேண்டுமென்று வகுத்திருக்கிறார்கள். ஆனால் சில ஆலைகளில் அரசாங்க அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அதற்கான சிறப்புக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்க அதிகாரிகள் மேனேஜிங் டைரக்டர்களாக இருக்கிறார்கள். ஆனால் சேர்மென்னாக இருப்பவர்கள் உத்தியோக சார்பற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். குறிப்பாக ஒரு இடத்தில் மட்டுமே அதனுடைய சேர்மென் டைரக்டராக இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கு இருக்கிற முறை முன்பு இருந்த பிரகாரம் செய்யப்பட்டது. ஆனால் இப்போது இருக்கிற முறை பிரகாரம் எப்படி செய்வது என்பது யோசிக்கப்படும்.

திரு கே. என். குமாரசாமி : அரசினர் நடத்துகின்ற தொழிற்சாலைகளைவிட தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளில் தொழில் தகராறுகள் அதிகமாக இருக்கின்றன என்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமாக இருக்கின்றனவா இல்லையா என்பதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் தான் தெரியும். அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. தனியார் துறையிலிருந்து பெறுவதைவிட அரசாங்கத்திலே அதிகமாகப் பெறமுடியும் என்ற ஆசை, உரிமை காரணமாக தொழிலாளர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : சர்க்கரை ஆலைகளுக்கு நியமிக்கப்படுகின்ற டைரக்டர்கள் எந்தெந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களிலே இன்னின்னார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கோவாபரேடிவ் பாங்கியிலிருந்து இன்னின்னாரும், தொழில் தெரிந்தவர்கள் இன்னின்னாரும், தனியார் துறையிலிருந்து இவ்வளவு பேர்களும் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்டம்

*** 324 வினா.—திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறநிலையச் சட்டம் 92-ம் பிரிவின் பிரகாரம் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதியுடன் முடியும். 1966–67-ம் வருட நிதி ஆண்டில் அடியிற்கண்டவைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ஏற்பட்ட செலவுகள் என்னென்ன ?

(1) பிராந்திய குழுக்கள், (2) ஆலோசனைக் குழுக்கள், உபகுழுக்கள், (3) புத்தகங்கள், சஞ்சிகைகள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1967-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய (அதாவது 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய) ஆன செலவு பின்வருமாறு :—

		ரூ.	பை.
1.	வட்டாரக்குழுக்கள்	4,863	70
2.	ஆலோசனைக் குழுக்களும் உபகுழுக்களும் ..	1,186	40
3.	நூல்களும் வெளியீடுகளும்	18,787	35